பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

24 07 2026 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நீட் வினாத்தாள் கசிவு சம்பவம் குறித்து கடும் நடவடிக்கை எடுக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
- அரசு மருத்துவமனைகளில், வசதிகளை அதிகரித்து நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தின் சில இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஜிம்பாப்வே-வுக்கு எதிரான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

**<<<<>>>>**

நீட் வினாத்தாள் கசிவு சம்பவம் குறித்து கடும் நடவடிக்கை எடுக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் நேற்றிரவு அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில், கடந்த இரண்டரை மாதங்களில் இது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் நலனை உறுதி செய்ய மறுதேர்வு உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது சிறிய பிரச்சினை அல்ல என்றும், இதை அரசு தீவிரமாக எடுத்துக்கொண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

விரைவு நீதிமன்றங்கள் அமைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தாம் உத்தரவிட்டதாகவும், அதன் வரைவு அறிக்கை தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இன்று நடைபெற உள்ள அமைச்சரவைக் கூட்டத்தில், வினாத்தாள் கசிவு சம்பவத்தில் தொடர்புடையவர்களுக்கு கடும் தண்டனைக்கான விதிகள் குறித்தும், விரைவு நீதிமன்றங்கள் குறித்தும் ஆலோசிக்கப்படும் என்றும அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட பின் இதுகுறித்த மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சிமாநாடு மற்றும் கண்காட்சி தொடர்பான அறிமுக கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பேசிய அவர், இந்த மாநாடு நவம்பர் மாதம் 2ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை புதுதில்லியில் நடைபெறும் என்று கூறினார்.

இதனை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்க இருப்பதாக தெரிவித்தார்.

இந்த மாநாடு நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஒரு முக்கிய நிகழ்வு என்று அவர் குறிப்பிட்டார்.

இத்துறையில் இந்தியா தொடர்ந்து சாதனை படைத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

புதைபடிவம் அல்லாத பொருட்களில் இருந்து மேற்கொள்ளப்படும் மின் உற்பத்தி 2014ஆம் ஆண்டில் 75 ஜிகா வாட்டாக இருந்தது என்றும், தற்போது அது 298 ஜிகா வாட்டாக அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்தார்.

விரைவில் இது 300 ஜிகா வாட்டை எட்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் சூரிய மின்சக்தி வீடுகள் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 50 லட்சத்தை நெருங்கியுள்ளதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சமூக நீதி விடுதிகளில் மாணவர்களின் குறைகளைக் களைய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவாக மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு வன்னி அரசு கூறியுள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் செயல்பட்டு வரும் விடுதிகளில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விடுதி காப்பாளர்கள் தவறு செய்வது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

<<<<>>>>

அரசு மருத்துவமனைகளில், வசதிகளை அதிகரித்து நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், பாம்புக் கடித்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர், சிகிச்சை தாமதமானதால் உயிரிழந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் திருச்சி அரசு மருத்துவமனையில் மூதாட்டி ஒருவரின் கால் விரலை எலி கடித்த சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுபோன்ற சம்வங்களுக்கு காரணமாக அதிகாரிகள் மீது தவெக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மருத்துவமனைகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தவெக ஆட்சியில் காவல் மரணங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தூத்துக்குடியில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் உயிரிழந்திருப்பது அதிர்ச்சியளிப்பதாக கூறியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்பட்டு யார் தவறு செய்திருந்தாலும், பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் மக்கள் தொடர்பகத்தின் சார்பில் அரசுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் பொள்ளாச்சியில் 2 நாட்கள் நடைபெற்றது.

இதில் பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், தூய்மை இந்தியா இயக்கம், பிரதமரின் மக்கள் மருந்த திட்டம் உள்ளிட்டவை குறித்து பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற நிறைவு நாள் நிகழ்ச்சியில் போதைப்பொருள் இல்லாத இந்தியா இயக்கம் தொடர்பான உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இதில் ஏராளமான மாணவ-மாணவிகள் பங்கேற்று உறுதிமொழி ஏற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களிலும், கடலூர், விழுப்பும், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

பிற மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு, கரூர், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்துக் காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஃபிரான்சில் லேஜ் பகுதியில் கடும் காட்டுத் தீ காரணமாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

**<<<<>>>>**

நாடு முழுவதும் 2 லட்சத்து 15 ஆயிரம் ஊராட்சிகளில் பாரத் நெட் திட்டத்தின்கீழ் இணையதள இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய தொலைதொடர்புத்துறை இணையமைச்சர் திரு. பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கவிஞர் கண்ணதாசனின் நூற்றாண்டு விழாவையொட்டி சாகித்ய அகாடமி சார்பில் செப்டம்பர் மாதம் திருச்சியில் நினைவு கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 6 லட்சத்து 32 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில் மேலும் 2 மரபணு பரிசோதனை ஆய்வகங்கள் அமைக்கப்படும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணையில் மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் தலைமையில் பருவமழை முன்னேற்பாடு தொடர்பாக நேற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

<<<<>>>>

சிவகாசியில் புதிய வழித்தடத்தில் அரசுப் பேருந்து சேவையை மாநில அமைச்சர் செல்வி கீர்த்தனா தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

விழுப்புரத்தில் குழந்தைகள் உரிமை பாதுகாப்பு குறித்து தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

தூத்துக்குடி மாநகராட்சியில் கடைகளில் அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின்போது 240 கிலோ தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

<<<<>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சூரியசக்தி திட்டங்களை உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்துவது குறித்து சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் அந்த வங்கியின் அதிகாரிகளுடன் மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஹராரேயில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ஜிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 125 ரன் எடுத்தது.

126 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 13 புள்ளி 2 ஓவரிலேயே வெற்றி இலக்கை எட்டியது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி ஹராரேயில் நாளை நடைபெறுகிறது.

**<<<<>>>>**